RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 139 | மே.27 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# "நாங்கள் யாரும் குதிரை பேரம் நடத்தவில்லை" : அமைச்சர் செங்கோட்டையன்

சென்னை: மே.27-

"அதிமுகவில் இருந்த எம்எல்ஏக்கள் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் ராஜினாமா செய்துள்ளனர். அதிமுக எம்எல்ஏக்களை நான் அழைத்து வந்து தவெகவில் சேர்ப்பதாக சொல்லும் குற்றச்சாட்டு தவறானது. பழனிசாமி என் மீது கோபத்தில் இருக்கிறார், அதனால் இதுபோல குற்றம்சாட்டுகிறார்" என அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில் இன்று செய்தியாளர்களிடம் செங்கோட்டையன் கூறும்போது, "பணநாயகத்தை வென்று ஜனநாயகத்தை காக்கும் முதல்வர் விஜய்யின் ஆட்சியின் செயல்பாடுகளை பார்த்து எல்லோரும் இன்று அவருடன் இணைந்துள்ளனர்.

ராஜினாமா செய்தவர்களுக்கு அதே தொகுதியில் மீண்டும் தவெக சார்பில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படுமா என்பது



போகப்போக தெரியும். எங்கள் ஆட்சியில் யாரும் குதிரை பேரம் நடத்தவில்லை. குதிரை பேரம் நடத்தியது யார் என்பது நாட்டுக்கே தெரியும். திமுக ஆதரவோடு நான் முதல்வர் ஆவேன் என்று சொன்னது யார் என்பதை தெரிந்துகொண்டு அவரிடம் இதற்கான பதிலை கேளுங்கள். அதிமுகவில் இருந்த எம்எல்ஏக்கள் தங்கள் விருப்பத்தின் பேரில் ராஜினாமா செய்துள்ளனர்.

புதிய ஆட்சி வந்துள்ளது, மாற்றங்கள் செய்ய வேண்டியுள்ளது. எனவே ஆறு மாத காலம் பொறுத்திருந்தே விமர்சிப்போம் என எதிர்க்கட்சியான திமுக சொன்னதா இல்லையா? நாங்களும் பொறுத்திருந்தே ஒவ்வொன்றாக செய்ய முடியும். எங்களுக்கும் அவகாசம் கொடுக்க வேண்டும்.

குற்றங்கள் நடக்கும்போது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கோவை சிறுமி விவகாரத்தில் குற்றவாளி உடனடியாக கைது செய்யப்பட்டுள்ளார். இதில் காவல் துறை கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

அதிமுக எம்எல்ஏக்களை நான் அழைத்து வந்து தவெகவில் சேர்ப்பதாக சொல்லும் குற்றச்சாட்டு தவறானது. நான் யாரையாவது அழைத்து வந்து சேர்த்தேனா? பழனிசாமி என் மீது கோபத்தில் இருக்கிறார், அதனால் இதுபோல குற்றம்சாட்டுகிறார்.

ஜெயலலிதா, எம்ஜிஆர் படங்கள் தேவையில்லை, தன் படம் போதும் என பழனிசாமி நினைத்தார்" என்று கூறினார்.



## நெற்குப்பை கிளை நூலகத்தில் கோடைகால பயிற்சி முகாமில் எழுத்தாளர் ஈஸ்வரன் பங்கேற்பு

சிவகங்கை. மே.27

சிவகங்கை மாவட்ட நெற்குப்பை சோமலெ நினைவு கிளை நூலகத்தில் பள்ளி மாணவ மாணவிகள் பங்கேற்கும் கோடைகால பயிற்சி முகாம் நூலகத்தில் நடைபெற்று வருகிறது.

26 ஆம் நாளான இன்று நடைபெற்ற பயிற்சி முகாமில் சமூக வளர்ச்சியில் நாடகத்தின் பங்களிப்பு என்ற தலைப்பில் பப்ளிஷர் மற்றும் தமிழ்நாடு அரசின் சிறந்த நாடக நூல்

விருந்தாளருமான எழுத்தாளர் கலை நன்மணி திரு. அ.ஈஸ்வரன் அவர்கள் உரையாற்றினார்கள் முத்தமிழாய் நாம் அறியப்படுவது இயல் இசை நாடகம் நாடகம் என்பது நாடு பிளஸ் அகம் அதுவே நாடகம் என்று அழைக்கப்படுகிறது

நாட்டில் வாழும் மனிதர்களின் வாழ்க்கை முறையையும் சமூக மேம்பாட்டையும் வலியுறுத்தியே நாடகம் நடத்தப்படுகிறதுநாம் தினம் தினம் சில கதாபாத்திரங்களோடு தான் நேரடியாக நம்ம தொடர்பு இருக்கிறது உலகில் ஆயிரக்கணக்கான கதாபாத்திரங்களை நாடகத்தின் வாயிலாக கலைகளின் வாயிலாகவே நாம் தெரிந்து கொள்கிறோம் என்ற கருத்து வலியுறுத்தி சிறப்பாக உரையாற்றினார்

மேலும் மாணவர்களுக்கு மிக எளிமையாக நாடகம் நடிப்பது பற்றி சிறப்பாக கற்றுக்கொடுத்து பங்கேற்ற மாணவர்களை நடிப்பு சொல்லிக் கொடுத்து உடனே சில நாடகங்களை அருமையான கருத்துக்களோடு மாணவர்களை நடிக்க வைத்து உடனே கற்றுக்கொண்டு நடித்து காண்பித்தனர் மிகவும் அது சிறப்பாக பார்வையாளர்களை கவர்ந்தது. ஈஸ்வரன் எழுதிய "உயிரின் தானம்!" என்ற நூல் அறிமுகம் செய்யப்பட்டது நிறைவாக நூலகர் நன்றி கூறினார்

## தவெக வாக்குறுதிக்கு மாறானது பயிர்க் கடன் தள்ளுபடி அறிவிப்பு: இந்திய கம்யூ. அதிருப்தி

சென்னை: மே.27-

"விவசாயிகளின் பயிர்க் கடன் தள்ளுபடி ஏமாற்றம் அளிக்கிறது. இது தலைமுறை, தலைமுறையாக கடன் சுமையில் சிக்கித் தவிக்கும் விவசாயிகளின் துயரங்களை குறைக்காது" என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "விவசாயிகள் பயிர்க் கடன் தள்ளுபடி ஏமாற்றம் அளிக்கிறது. தமிழ்நாடு முதல்வர் விஜய், விவசாயிகள் சாகுபடி செலவின வகைக்காக கூட்டுறவு வங்கிகளில் பெற்றுள்ள பயிர்கடன்களில் ரூ.50 ஆயிரம் வரையான கடன்கள் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என நேற்று அறிவித்துள்ளார். இது தலைமுறை, தலைமுறையாக



கடன் சுமையில் சிக்கித் தவிக்கும் விவசாயிகளின் துயரங்களை குறைக்காது.

தமிழக வெற்றிக் கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், "5 ஏக்கருக்கும் குறைவான நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள பயிர்க் கடன்கள் முற்றிலுமாக தள்ளுபடி செய்யப்படும்" என வழங்கியுள்ள உறுதி மொழிக்கும் மாறானது.

இதுவரை விவசாயிகளுக்கான கடன் நிவாரணம் சாகுபடி நிலத்தின் அளவை அடிப்படையாகக் கொண்டதாகவே வழங்கப்பட்டது. இந்த வழிமுறையை மாற்றி "பண மதிப்பை" அடிப்படையாகக் கொண்டு வகுத்துள்ள புதிய முறையும் ஏற்கதக்கதல்ல.

ஏனெனில், மாவட்டத்துக்கு மாவட்டம், பயிருக்கு பயிர் சாகுபடிச் செலவுகள் மாறுபடும் என்பதை அரசு கருத்தில் கொள்ள வேண்டும்.

இதனை கருத்தில் கொண்டு தேர்தல் வாக்குறுதிப்படி 5 ஏக்கருக்கும் குறைவான நிலம் உள்ள விவசாயிகளின் பயிர் கடன்களை முற்றிலும் தள்ளுபடி செய்து, மறு உத்தரவு வழங்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, முதல்வரை கேட்டுக் கொள்கிறது" என்று அவர் கூறியுள்ளார்.

## மீண்டும் கட்சி தாவிய டாக்டர் பா.சரவணன் உள்ளாட்சித் தேர்தலை குறிவைத்து தவெகவில் ஐக்கியம்


மதுரை: மே.27-

சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக சார்பில் மதுரை வடக்குத் தொகுதியில் போட்டியிட்டு தோல்வி அடைந்த டாக்டர் பா. சரவணன், மீண்டும் கட்சி தாவி தவெகவில் இணைந்தார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் மதுரை மாவட்டத்தில் 10 தொகுதிகளிலும் அதிமுக தோல்வி அடைந்தது. இதை தொடர்ந்து மதுரை மாநகர் அதிமுக பொருளாளர் குமார், மாவட்ட மாணவர் அணி செயலாளர் பார்த்திபன், இணைச் செயலாளர் மாரநாடு, பகுதி செயலாளர் ஜெயபாண்டி உள்ளிட்டோர் தவெகவில் இணைந்தனர்.

இவர்கள் 4 பேரும் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூக்கு நெருக்கமானவர்கள். இந்த பரபரப்பு அடங்குவதற்குள், நேற்று டாக்டர் பா. சரவணன் அமைச்சர் ஆனந்த் முன்னிலையில் தவெகவில் இணைந்தார். இவர், ஏற்கெனவே மதிமுக, திமுக, பாஜகவில் இருந்தவர். ஒவ்வொரு கட்சியிலும், அதன் தலைமையுடன் ஏற்பட்ட முரண்பாடுகள், தேர்தலில் போட்டியிட 'சீட்' கிடைக்காத விரக்தியில் மற்ற கட்சிகளுக்கு தாவி வந்தார்.

கடைசியாக பாஜகவில் இருந்து அதிமுகவில் இணைந்து 2024



மக்களவை தேர்தலில் மதுரையில் போட்டியிட்டு 3ம் இடம் பிடித்தார். மேலும், தற்போது முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலில் மதுரை வடக்கு தொகுதியில் போட்டியிட உள்ளூர் மாநகர் நிர்வாகிகள் எதிர்ப்பை மீறி பா. சரவணனுக்கு பொதுச்செயலாளர் பழனிசாமி வாய்ப்பு வழங்கினார். ஆனாலும், இந்த தேர்தலிலும் சரவணன் 3ம் இடத்துக்கு தள்ளப்பட்டார்.

டாக்டர் பா. சரவணன் 2019 ம் ஆண்டு திருப்பரங்குன்றம் தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்று 2 ஆண்டுகள் மட்டும் எம்எல்ஏவாக இருந்தார். அடுத்த 2021 சட்டப்பேரவை தேர்தலில் சீட் கிடைக்காத விரக்தியில் திமுகவில் இருந்து விலகி பாஜகவில் சேர்ந்து மறுநாளே சீட் பெற்றார். அப்போது அதிமுக கூட்டணியில் வடக்கு தொகுதியில் போட்டியிட்டு தோல்வி அடைந்தார்.

அதன்பிறகு பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலையுடன் மோதல் ஏற்பட்டதால் முன்னாள் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் மூலம் மீண்டும் திமுகவில் சேர முயற்சித்தும் முடியவில்லை. இந்நிலையில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் மூலம் அதிமுகவில் இணைந்தார்.

தற்போது அங்கும் மக்களவைத் தேர்தல், சட்டப்பேரவைத் தேர்தலில் தோல்வி அடைந்ததால் தவெகவில் இணைந்துள்ளதாக கூறப்படுகிறது. டாக்டர் பா.சரவணன், பல்வேறு கட்சிகளுக்கு சென்று வந்ததால் அதிமுகவில் அவர் இணைந்தபோது திமுக, பாஜக உள்ளிட்ட கட்சியினர் அவரை 'சர்வ கட்சி சரவணன்' என்று விமர்சனம் செய்தனர்.

இதுகுறித்து அதிமுக நிர்வாகிகள் சிலர் கூறுகையில், ''அதிமுகவில் கொள்கைப் பிடிப்பில்லாத, லாப நோக்குடன் இருந்தவர்கள், ஒருவர் பின் ஒருவராக வெளியேறுகிறார்கள். அந்த வரிசையில் டாக்டர் பா.சரவணனும் சென்றுள்ளார்.

அவர் மக்களவைத் தேர்தல் தோல்வியின்போதே ஓரிரு நாட்களிலேயே வேறு கட்சியில் இணைவார் என எதிர்பார்த்தோம். சற்று தாமதமாக தவெகவுக்கு சென்றுள்ளார். உள்ளாட்சித் தேர்தலில் அவர் மேயர் பதவியை எதிர்பார்த்து செல்வதாக கூறுகிறார்கள்.

அங்கும் 'சீட்' கிடைக்காவிட்டால் வெளியேறுவார். உள்ளாட்சித் தேர்தல் சட்டப்பேரவை தேர்தலை போல அல்ல. அதில் அவரவர் சொந்த செல்வாக்கை கொண்டே வெற்றி பெறுவர். அதனால் தவெகவுக்கு செல்வோர் உள்ளாட்சித் தேர்தலில் வெல்லப் போவதில்லை'' என்றனர்.

## "இன்னும் நிறைய ஏமாற்றங்களுக்கு மக்கள் தயாராக இருக்க வேண்டுமா சி.எம் சார்?" : உதயநிதி

சென்னை: மே.27-

"பயிர்க்கடன் தள்ளுபடி என்ற பெயரில், மோசடி செய்கிறார்கள். இப்படி, இன்னும் நிறைய ஏமாற்றங்களுக்கு மக்கள் மனதளவில் தயாராக இருக்க வேண்டுமா சி.எம் சார்" என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "பயிர்க்கடன் தள்ளுபடி என்ற பெயரில் விவசாயிகளை ஏமாற்றி இருக்கிறது தவெக அரசு. தேர்தல் பிரச்சாரத்தின் போது, 5 ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கும்



விவசாயிகளுக்கு முழுமையான பயிர்க்கடன் தள்ளுபடி என்று வாக்குறுதி தந்தார்கள். ஆனால், இப்போது ரூ.50,000 வரையிலான கடனுக்கு மட்டுமே முழு தள்ளுபடி என்று சொல்லி இருக்கிறார்கள்.

இது விவசாயிகளுக்கு இழைக்கப்படும் அநீதி. மாபெரும் நம்பிக்கை மோசடி. ஏற்கெனவே, 200 யூனிட் வரை கட்டணமில்லா மின்சாரம் என்று சொல்லிவிட்டு, 500 யூனிட்டுக்கு மேல் பயன்படுத்தினால் அது கிடையாது என்று அதிர்ச்சி தந்தார்கள்.

இப்போது, பயிர்க்கடன் தள்ளுபடி என்ற பெயரில், மோசடி செய்கிறார்கள். இப்படி, இன்னும் நிறைய ஏமாற்றங்களுக்கு மக்கள் மனதளவில் தயாராக இருக்க வேண்டுமா சி.எம் சார்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**



# தேனி மாவட்டம் மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கான பயிற்சி

## மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங், தலைமையில் நடைபெற்றது

தேனி மே.27-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணியில் ஈடுபடும் அலுவலர்கள், பொறுப்பு அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ் ஜீத்சிங், தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முழுவதும் மக்கள் தொகை கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளது. அதனடிப்படையில், மக்கள் தொகை கணக்கெடுப்பில்

சுய கணக்கெடுப்பு மற்றும் டிஜிட்டல் முறை கணக்கெடுப்பு முதல் முறையாக அறிமுகப்படுத்தப்படுகிறது. பொது மக்கள் தாங்களாகவே இணையதளம் (CMMS Portal) மூலமாக தங்களது விவரங்களை தெரிவிக்கும் சுய கணக்கெடுப்புவருகின்ற

ஜூலை 17ஆம் தேதி முதல் ஜூலை 31ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. கணக்கெடுப்பாளர் மூலம் வீடுகள்தோறும் மேற்கொள்ளப்படும் வீட்டுப் பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு பணி வருகின்ற ஆகஸ்ட் 1ஆம் தேதி முதல்

ஆகஸ்ட் 30ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

மக்கள்தொகை கணக்கெடுப்பு தொடர்பான பணிகளை சிறப்பாக மேற்கொள்ளும் பொருட்டு, மக்கள்தொகை கணக்கெடுப்பு பணியில் ஈடுபடும் அலுவலர்கள், பொறுப்பு அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று 25.05.2026 முதல் 27.05.2026 வரை 3 நாள் நடைபெற உள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ராமகிருஷ்ணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் .ஏ.எடிசன், பயிற்சியாளர்கள்.வசந்த குமார், .லோகநாதன், .ராஜேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# கிராண்ட்லையன் ஊராட்சியில் பொதுமக்களுக்கு இலவச இதயம் மற்றும் பொது மருத்துவம், கண் அறுவை சிகிச்சை பரிசோதனை முகாம்

மாதவரம், மே.27-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் கிராண்ட்லையன் ஊராட்சி சமுதாய நலகூடத்தில் ஓம் ஸ்ரீ மஹா கணபதி டிரஸ்ட், அப்போலோ மருத்துவமனை, சங்கரா நேத்ராலயா ஆகியோர் இணைந்து பொதுமக்களுக்கு இலவச இதயம் மற்றும் பொது மருத்துவம், கண் அறுவை சிகிச்சை பரிசோதனை முகாம் ஓம் ஸ்ரீ மஹா கணபதி டிரஸ்ட் நிர்வாகத்தின் அறங்காவலர் இ.கே.என். சோமசுந்தரம் குருநாதர் தலைமையில் நடைபெற்றது.

லயன்ஸ் சங்க வட்டாரத் தலைவர் மணிவண்ணன், பாடியநல்லூர் லயன்ஸ் சங்க நிர்வாகி ஷண்முகசுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த முகாமில் உயரம், எடை, இரத்த அழுத்தம், இரத்தத்தில் சர்க்கரை அளவு, இசிஜி, எக்கோ, கண் பரிசோதனை, மருத்துவர்கள் ஆலோசனை உள்ளிட்டவைகள் இலவசமாக பொதுமக்களுக்கு பரிசோதிக்கப்பட்டு இலவசமாக மருந்து மாத்திரைகள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இம்முகாமில் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர். 26 பேர் அறுவை சிகிச்சைக்கும், 47 பேர் இலவச மூக்கு கண்ணாடி வழங்க தேர்வு செய்யப்பட்டனர். புள்ளிலைன் நியூ பார்ன் மனநல காப்பகத்திற்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

பாடியநல்லூர் லயன்ஸ் சங்கம், ரெட்ஹில்ஸ் கிங் லயன்ஸ் சங்கம், மாஸ் குடியிருப்போர் பொது நலச் சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் இணைந்து சிறப்பாக இந்நிகழ்ச்சினை ஒருங்கிணைப்பு செய்திருந்தனர்.




# தென்காசி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் பதவி ஏற்பு

தென்காசி மே.27-

தென்காசி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக திரு.அசோக்குமார் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார் அவருக்கு தென்காசி மாவட்ட அனைத்து காவல் நிலைய ஆய்வாளர்கள் உதவி ஆய்வாளர்கள் போக்குவரத்து ஆய்வாளர் மற்றும் போக்குவரத்து உதவி ஆய்வாளர்கள் காவலர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் வட்டாட்சியர்கள் சமூக ஆர்வலர்கள் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர் புதிய காவல்துறை கண்காணிப்பாளர் அசோக் குமார் காவல்துறை அணிவகுப்பு மரியாதை ஏற்றுக்கொண்டு காவல்துறை கண்காணிப்பாளராக பொறுப்பேற்றுக் கொண்டார் தென்காசி மாவட்டத்தின் 9வது மாவட்ட காவல் கண்காணிப்பாளராக திரு.ஷி.அசோக் குமார் அவர்கள் (25.05.2026) பொறுப்பேற்றுக் கொண்டார் இதற்கு முன்பு தென்காசி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக திரு.மயில்வாகனம் இ '.கா.. பஅவர்கள் தமிழக சட்டமன்ற பொது தேர்தலின் போது மிகச் சிறப்பாக பணியாற்றி தேர்தலை வெற்றிகரமாக நடத்தி முடித்தார் அதனைத் தொடர்ந்து தமிழக வெற்றிக் கழகம் பெருவாரியான தொகுதிகளில் வெற்றி பெற்று புதிய ஆட்சி அமைத்தவுடன் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் திரு.மயில்வாகனம்அவர்களை சிறப்பு படைக்கு மாற்றி உத்தரவிட்டார் அதனைத் தொடர்ந்து அவர் சென்னையில் சிறப்பு படை கண்காணிப்பாளராக பதவி ஏற்றதை தொடர்ந்து தென்காசி மாவட்டத்திற்கு புதிய காவல்துறை கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டார்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக, 7 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1 இலட்சத்து 51 ஆயிரத்து 650 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் வழங்கினார். உடன், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் முருகேசன், துணை ஆட்சியர் (பயிற்சி) சௌமியா உள்ளிட்ட பலர் உள்ளனர்.



# தேனி மாவட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 355 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது

தேனி மே.27-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 355 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ் ஜீத் சிங், பொது மக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 355 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் ரூ.1,12,000/ மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்களை 20 சிறுபான்மையினர் மகளிர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் .ப.ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ராமகிருஷ்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர் நல்லையா, தனித்துணை ஆட்சியர் கவிதா, உதவி ஆணையர் (கலால்) பஞ் சாபகேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் .சுரேஷ்குமார், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் .ஏ.எடிசன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# சாமி கும்பிட மட்டும்தான் வந்தேன்…" பழனியில் அரசியல் கேள்விகளுக்கு 'ஜெயம்' ரவியின் நச் பதில்

பழனி, மே.27-

தமிழ் திரையுலகின் முன்னணி நட்சத்திரமான நடிகர் ஜெயம் ரவி, இன்று காலை பழனி முருகன் கோவிலுக்குத் திடீர் வருகை தந்தார். அடிவாரத்திற்கு வந்த அவரைப் பார்த்த ரசிகர்கள், உற்சாகமடைந்து அவரைச் சூழ்ந்து கொண்டு செல்ஃபி எடுத்தனர். தொடர்ந்து, மின் இழுவை ரயில் எனப்படும் 'வின்ச்' மூலமாக மலைக்கோவிலை அடைந்த அவர், மூலவர் தண்டாயுதபாணியை மிக அருகில் சென்று மனமுருகிப் பிரார்த்தனை செய்தார். பின்னர், புகழ்பெற்ற போகர் சன்னதி மற்றும் ஆனந்த விநாயகர் கோவிலிலும் சிறப்பு வழிபாடு நடத்தினார். அவருக்குக் கோவில் நிர்வாகம் சார்பில் பிரசாதங்கள் வழங்கி சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தரிசனம் முடித்துவிட்டு வெளியே வந்த ஜெயம் ரவி செய்தியாளர்களிடம் பேசியதாவது.

"நான் சிறுவயதில் இந்த பழனி மலைக் கோவிலுக்கு வந்திருக்கிறேன். நீண்ட நாட்களுக்குப் பிறகு இப்போது வந்து சாமி தரிசனம் செய்ததுமனதிற்குள் ஒரு பெரும் அமைதியையும், சிறப்பான உணர்வையும் தந்துள்ளது." தவெக தலைவர் விஜய் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ளது குறித்துச் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குச் சிரித்துக்கொண்டே, "நான் இங்க சாமி கும்பிட மட்டும்தான் வந்திருக்கேன்" என்று ஒற்றை வரியில்பதிலளித்து, அரசியல் சர்ச்சைகளுக்கு இடம் கொடுக்காமல் அவர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.



■ சென்னை செங்குன்றம், பாடியநல்லூர் ஜிஎஸ்டி ரோடு, (ரேவதி ஸ்டோர் எதிரில்), ஏ ஆர் டி எஸ் அறக்கட்டளை - மாயா பார்ட்டி ஹால் திறப்பு விழா நடைபெற்றது. ஆன்மீக செம்மல் லயன் டாக்டர் ஏ.ஆர் தர்மலிங்கம் யாதவ், சமூக பொருளாதார முன்னேற்ற அறக்கட்டளை, ஜூபில் பிளாட்ஸ் - ஹவுசிங் டெவலப்மென்ட் நிறுவன தலைவர், ராணிசங்குபதி தர்மலிங்கம் திறந்து வைத்தனர். திறப்பு விழாவிற்கு வருகை தந்த அனைவரையும், எம் சரவணன் மாயா, எஸ். கலைசெல்வி, எம் சங்கர்மாயா, எஸ்.ராணி இவர்கள் வரவேற்றனர்.

# தேனி மாவட்டம் பொதுமக்கள் தங்கள் குறைகள் கோரிக்கைகள் தொடர்பான புகார்களை தெரிவிக்க வாட்ஸ்அப் (94877 71077) சேவை தொடக்கம் : மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங்

தேனி, மே.27-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் பொதுமக்கள் தங்கள் குறைகள் / கோரிக்கைகள் தொடர்பான புகார்களை தெரிவிப்பதற்கான வாட்ஸ்அப் (9487771077) சேவையை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ் ஜீத்சிங், தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது, பொதுமக்கள் தங்களது குறைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பான புகார்களை எளிதாகவும், விரைவாகவும் மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்கும் வகையிலும் மற்றும் அரசு அலுவலகங்களுக்கு நேரில் வராமல், தங்களது கைப்பேசி மூலமாகவே குறைகளை பதிவு




செய்யும் வகையில் புதிய வாட்ஸ்அப் (9487771077) சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வாட்ஸ்அப் மட்டுமின்றி தொலைப்பேசி மூலம் தொடர்பு கொண்டும் புகார் தெரிவிக்கலாம்.

இந்த வாட்ஸ்அப் எண்ணிற்கு பொதுமக்கள் குடிநீர், சாலை வசதி, மின்விளக்கு, கழிவுநீர் வடிகால், சுகாதாரம், வருவாய் தொடர்பான பிரச்சினைகள், பொது விநியோக திட்டம், நெடுஞ்சாலை உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்ந்த குறைகள் மற்றும் கோரிக்கைகளை புகைப்படம் அல்லது வீடியோக்கள் வடிவில் அனுப்பலாம். பெறப்படும் புகார்கள் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டு, விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்கள் தங்கள் புகார்களை 24ஜீ7 மணி நேரமும் தெரிவிக்கலாம். மேலும் புகார் தெரிவிக்கும் நபர்களுடைய பெயர் மற்றும் தொலைப்பேசி எண்கள் பாதுகாக்கப்படும்.

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் சிறிய அளவிலான மற்றும் அன்றாட தேவைகள் தொடர்பான புகார்களுக்கு உடனடி தீர்வுகள் வழங்கப்படும். அதிக நிதி தேவைப்படும் பணிகள் தொடர்பான புகார்களுக்கு திட்டமிடல் மற்றும் நிதி ஒதுக்கீடு தேவைப்படுவதால், அவற்றை நிறைவேற்ற சிறிது காலம் எடுத்துக்கொள்ளப்படும். பொதுமக்கள் அளிக்கும் புகார்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு, அவற்றின் நிலை குறித்து தொடர்ந்து கண்காணிப்பு செய்யப்படும்.

தேனி மாவட்ட மக்களின் குறைகள் மற்றும் கோரிக்கைகளை உடனுக்குடன் அறிந்து தீர்வு காணும் நோக்கில் தொடங்கப்பட்டுள்ள வாட்ஸ் அப் புகார் எண்ணிற்கு புகார் தெரிவிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.


இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர்.ப.ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது).ராமகிருஷ்ணன், மாவட்ட வழங்கல்அலுவலர். நல்லையா, தனித்துணை ஆட்சியர் கவிதா, உதவி ஆணையர் (கலால்) .பஞ் சாபகேசன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன், வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை). செந்தில் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை சார்பாக போதைபொருள் தடுப்பு, கள்ளச்சாராயம் ஒழிப்பு மற்றும் சட்ட விரோத மதுவிற்பனை தடுப்பு குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட காண்காணிப்பாளர் தங்கதுரை, உதவி ஆணையர் (ஆயம்) பழனி, மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் செந்தில் குமார், டாஸ்மாக் பொது மேலாளர் செங்கிஸ்கான், மற்றும் பள்ளி கல்வித்துறை, சுகாதாரத்துறை, மதுவிலக்கு காவல் துறை, உள்ளாட்சித்துறை உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

மாலை தந்தி

புதன்கிழமை 27.05.2026



## நந்திவரம் கூடுவாஞ்சேரியில் இரவு நேரத்தில் அடிக்கடி மின்வெட்டு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்ககோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு

செங்கல்பட்டு, மே, 27-

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வாராந்திர கூட்டம் நடைபெறுவது வழக்கம். இந்த முகாமில் பொதுமக்கள் தங்கள் குறைகளை மாவட்ட நிர்வாகத்திடம் மனுவாக வழங்கி குறைகளை தீர்த்துக்கொள்வார்கள். அந்த வகையில் செங்கல்பட்டு மாவட்டம் நந்திவரம் கூடுவாஞ் சேரியின் திமுக நகர செயலாளர் எம்.கே.டி.கார்த்திக் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் மாலதி ஹெலனிடம் மனு ஒன்றை வழங்கினார்.

அந்த மனுவில் குறிப்பிட்டு இருப்பதாவது: செங்கல்பட்டு மாவட்டம் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் தொடர்ச்சியாக நள்ளிரவு நேரத்தில் தினம் தினம் அறிவிக்க படாத மின்வெட்டு எற்படுகின்றது. இதனால் குழந்தகள் முதல் முதியவர்கள் வரை தூக்கத்தை இழந்து பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். மேலும் குறைந்த மின் அழுத்த டிரான்ஸ்பார்கள் இருப்பதால் தான் இரவு நேரத்தில் அடிக்கடி மின்வெட்டு ஏற்படுகின்றது. எனவே மின்சார துறை அதிகாரிகள் கோடை காலத்தை கருத்தில் கொண்டு உயர் மின் அழுத்தம் கொண்ட டிரான்ஸ்பாரம் அமைக்க மாவட்ட நிர்வாகமும் மின்சார துறை அதிகாரிகள் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காவேரிப்பட்டினத்தில் மாபெரும் கிரிக்கெட் போட்டி : வெற்றி பெற்ற அணிகளுக்கு ரொக்கப் பரிசு மற்றும் சுழல் கோப்பை வழங்கி பாராட்டு

கிருஷ்ணகிரி, மே.27-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் தமிழக வெற்றி கழகம் சார்பில் மாவட்ட அளவிலான மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. தமிழக முதல்வராக ஜோசப் விஜய் பதவி ஏற்றதை கொண்டாடும் வகையில் இந்த போட்டி நடத்தப்பட்டது.





காவேரிப்பட்டினம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானம் மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில் கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், போத்தாபுரம், தளிஹள்ளி, நரிமேடு, பையூர், ஜெகதாப், ஹாள்வேஹாள்ளி, திம்மாபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து 24 அணிகள் கலந்து கொண்டு விளையாடின.

நாக்அவுட் முறையில் நடைபெற்ற போட்டியில் இறுதிப்போட்டிக்கு "கிரிக்கெட் டீம்" மற்றும் "11 எப்.சி.சி." அணிகள் தகுதி பெற்றன. பரபரப்பாக நடைபெற்ற இறுதிப்போட்டியில் "கிரிக்கெட் டீம்" அணி வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

பின்னர் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக தவெக சட்டமன்ற உறுப்பினர் முருந்தன் மற்றும் காங்கிரஸ் கட்சியின் பொதுக்குழு உறுப்பினரும் முன்னாள் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவருமான எல். சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு ரொக்கப் பரிசுகள் மற்றும் சுழல் கோப்பைகளை வழங்கி பாராட்டினர்.

இதில் முதலிடம் பிடித்த "கிரிக்கெட் டீம்" அணிக்கும், இரண்டாம் இடம் பெற்ற "11 எப்.சி.சி." அணிக்கும், மூன்றாம் இடம் பெற்ற "ஆர்.சி.பி." அணிக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் காவேரிப்பட்டினம் தவெக ஒன்றிய செயலாளர் விஜய்குமார், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் பார்த்திபன், கிருஷ்ணகிரி நகர சசிகுமார், திம்மாபுரம் ஊராட்சி செயலாளர் விஜய், துணை ஊராட்சி செயலாளர் சக்திவேல், காவேரிப்பட்டணம் பேரூராட்சி செயலாளர் கோகுல், ஒன்றிய துணை செயலாளர் உதயகுமார், ஒன்றிய இணைச் செயலாளர் பச்சையப்பா, நகர இளைஞரணி செயலாளர் அப்துல் ரஷீக், நகர செயற்குழு உறுப்பினர் அருண்குமார், கே.வி.எஸ். சாந்தகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தவெக ஆட்சியில் தீர்க்கப்படுமா நெல் கொள்முதல் நிலைய பிரச்சினைகள்? எதிர்பார்ப்பில் விவசாயிகள்

மதுரை, மே.27-

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் விவசாயிகளிடம் இருந்து இடைத் தரகர்களை தவிர்த்து, குறைந்தபட்ச ஆதரவு விலையில் அரசே நேரடியாக நெல் கொள்முதல் செய்வதற்காக நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக் கப்பட்டுள்ளது.

இங்கு கொள்முதல் செய்யப்படும் நெல் ஒரு மூட்டைக்கு (40.580 கிலோ) ஆதரவு விலை தற்போது ஏ கிரேடு ரக நெல் குவின்டாலுக்கு ரூ.2,545, பொது ரக நெல் குவின்டாலுக்கு ரூ.2,500 நிர்ணயித்துள்ளது.

கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளுக்கான தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டு வருகிறது. குறுவை (அக்டோபர் டிசம்பர்), சம்பா (ஜனவரி ஜூலை) ஆகிய அறுவடை பருவங்களில் இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன.

விவசாயிகள் தங்கள் நெல்லை விற்பனை செய்ய, அருகில் உள்ள நேரடி கொள்முதல் நிலையத்தை அணுகலாம் அல்லது முன்பதிவு மற்றும் விவரங்களை அறிய மின்னணு நேரடி கொள்முதல் மையத்தின் www.tncsc-edpc.tn.gov.in என்ற வலைதளத்தைப் பார்வையிடலாம்.

மதுரை மாவட்டத்தில் சுமார் 48 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், நெல் எடை போட மூட்டை ஒன்றுக்கு ரூ.60 வரை கட்டாயமாக வசூலிக்கப்படுகிறது.

மேலும், மூட்டைக்கு 2 கிலோ வரை கூடுதலாக எடை பிடிக்கப்படுவதாகவும் விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். இது குறித்து விவசாயி அய்யாக்கண்ணு கூறுகையில், நேரடி கொள்முதல் நிலையங்களில் வெயில் காலத்தில் விவசாயிகள் தங்கள் நெல்லை உலர வைத்துக்கொண்டு வந்து கொடுக்கின்றனர்.

ஆனால், மழைக்காலத்தில் நெல்லை உலரவைக்க முடியாமல் சிரமப்படுகின்றனர். இக்கால கட்டங்களில் நெல்லின் ஈரப்பத அளவை 17 சதவீதத்தில் இருந்து 22 சதவீதமாக உயர்த்தினால் வசதியாக இருக்கும்.

இதற்கு, அரசு நெல் உலர வைக்கும் இயந்திரங்களை கையாண்டால் இந்த பிரச்சினை இருக்காது. நெல் மூட்டை எடை போட கூலி யாக மூட்டை ஒன்றுக்கு ரூ. 10 வழங்குகிறது.

இந்த கூலி போதுமானதாக இல்லாத காரணத் தால் அவர்கள் விவசாயி களிடம் கூடுதல் தொகை ரூ.60 வரை வசூலிக்கும் நிலை ஏற் பட்டுள்ளது. எனவே, இதை அரசு கருத்தில் கொண்டு, நெல் மூட்டை எடை போடும் தொழி லாளிக்கு மூட்டை ஒன்றுக்கு ரூ.50 வழங்கினால், விவசா யிகளிடம் கூடுதல் தொகை வசூலிப்பது தடுக்கப்படும்.

சில நேரங்களில் நெல் கொள் முதல் செய்யப்பட்டு 50 நாட் களுக்கு மேலாகியும் விவசாயி களின் வங்கிக் கணக்குகளுக்கு பணம் வராததால், அடுத்தடுத்த விவசாயப் பணிகளுக்கு நிதி நெருக்கடி ஏற்படுகிறது. இதையெல்லாம் புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசு கவனத்தில் கொண்டு விவசாயிகளின் நலனை பாது காக்க வேண்டும் என அவர் கூறினார்.



## ஊத்துக்கோட்டை அருகே தாசுகுப்பத்தில் தலீத் பெண்ணை மாத்தம்மா கோவிலுக்கு உள்ளே விடாமல் 16 வருடம் ஒதுக்கி வைத்ததினால் பரபரப்பு

திருவள்ளூர், மே.27-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை அருகே தாசுகுப்பத்தை சேர்ந்த முனியேந்திரன் கச்சூரை சேர்ந்த அமுதா என்ற தலீத் பெண்ணை காதலித்து திருமணம் செய்து கொண்டார் எண்பதற்காக கடந்த 16 வருடங்களாக மாத்தம்மாள் கோவிலுக்கு உள்ளே சென்று சாமி கும்பிட தடைசெய்து ஒதுக்கி வைத்ததினால் அப்பகுதி தலீத் மக்கள் மற்றும் சத்தியவேடு உதவி ஆய்வாளர் சாய்னா சொளத்திரி மற்றும் பாலாஜிரெட்டி லோகுரெட்டி புரட்சிபாரதம் கட்சி மாட்ட துணைசெயலாளர் செல்வம் மற்றும் சரவணன் சிட்டிபாபு இயேசு அம்பேத்கர் ஆர்மிஆந்திர மாநில பொறுப்பாளர் வெங்கடேசன் தலைமையில் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு பின் சரசம் ஏற்பட்டு காவலர்கள் பாதுகாப்போடு கோவிலுக்கு உள்ளே சென்று தேங்காய் உடைத்து கர்பூரம் ஏற்றி சாமிதரிசணம் செய்தனர் இதனால் அப்பகுதியில் சுமார் 4மணிநேரம் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது

## "சட்ட விதிகளுக்கு உட்பட்டே நடவடிக்கை" எம்எல்ஏக்கள் ராஜினாமா ஏற்பு தொடர்பாக சபாநாயகர் விளக்கம்

சென்னை, மே.27-

சட்ட விதிகளுக்கு உட்பட்டே அதிமுக எம்எல்ஏக்கள் ராஜினாமா கடிதங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாக சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் தெரி வித்துள்ளார்.

நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களை கைப்பற்றிய விஜய்யின் தவெக, காங்கிரஸ், விசிக, கம்யூனிஸ்ட், ஐயூஎம்எல் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைத்துள்ளது. இதனிடையே, ஆட்சியை தக்க வைக்க நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில், அதிமுக சாரில் சி.வி.சண்முகம், எஸ்.பி.வேலுமணி, சி.விஜயபாஸ்கர் தரப்பில் 25 எம். எல்.ஏக்கள் தவெக அரசுக்கு ஆதரவு அளிப்பதாக கூறியதால், அதிமுக கட்சிக்குள் பிளவு ஏற்பட்டது.

கட்சி தலைமையின் விதிகளை மீறிய 25 எம்எல்ஏக்களையும் தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி தரப்பில் சபாநாயரிடம் கோரிக்கை மனு வழங்கப்பட்டது. இதில், சிலர் மீண்டும் எடப்பாடி பழனிசாமியை நேரில் சந்தித்து இபிஎஸ் அணியில் தங்களை இணைத்துக்கொண்டனர். இதனால் சி.வி.சண்முகம் தரப்பு குழுவில் சலசலப்பு ஏற்பட்டது.

இந்நிலையில், நேற்று சி.வி.சண்முகம் தரப்பில் தவெக அரசுக்கு ஆதரவு அளித்த மூன்று அதிமுக எம்எல்ஏக்கள் தங்கள் எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தனர். அவர்களின் ராஜினாமா கடிதம் உடனடியாக ஏற்கப்பட்டு மூவரும் தவெகவில் இணைந்தனர். இன்று மேலும் ஒரு அதிமுக எம்எல்ஏ தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இதற்கு எதிர்ப்பு தெரி வித்த எடப்பாடி பழனிசாமி தரப்பினர், ராஜினாமா கடிதங்களை ஏற்கக் கூடாது என்று சபாநாயகரிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இதனிடையே சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர், "சட்ட விதிகளுக்கு உட்பட்டே அதிமுக எம்எல்ஏக்களின் ராஜினாமா கடிதம் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முழுக்க முழுக்க சபாநாயகரின் சட்ட விதிகளின்படியே நடவடிக்கை எடுத்தேன்.

எடப்பாடி பழனிசாமி தரப்பினர் வழங்கிய மனு மீது முறையாக நடவடிக்கை எடுக்க சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளதே தவிர மனுவை ஒதுக்கவில்லை. தவெக அரசுக்கு ஆதரவு கூடுகிறதா குறைகிறதா என்பதை கவனிப்பது எனது வேலை அல்ல, எனது வேலை எண்ணிக்கையை சரி பார்ப்பது மட்டுமே." என்று கூறினார்.

## கொளத்தூரில் ஜெ.குரு நினைவு நாள் அனுசரிப்பு

மாதவரம், மே.27-

வடசென்னை வடக்கு மாவட்டம் கொளத்தூர் தொகுதி ரெட்டேரி பகுதியில் வடசென்னை வடக்கு மாவட்ட வன்னியர் சங்கம் சார்பில் மறைந்த வன்னியர் சங்க தலைவர் ஜெ.குருவின் 8ம் ஆண்டு நினைவு நாள் மற்றும் குருபூஜை நிகழ்ச்சி வடசென்னை வடக்கு மாவட்ட வன்னியர் சங்க தலைவர் கே.என். ஆனந்தன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.கொளத்தூர் தொகுதி தலைவர் பூகடை செந்தில் அனைவரையும் வரவேற்றார். வன்னியர் சங்க மாவட்ட




செயலாளர் ராஜகுரு மாவட்ட பொருலாளர் பரத்குமார், மாவட்ட துணைத்தலைவர்கள் வாஞ்சிநாதன், வி.ஜெ. செந்தில், மாவட்ட துணை செயலாளர்கள் ஜெயக்குமார், யோகேஷ், மாவட்ட அமைப்பாளர் ஐசப்நாகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக வடசென்னை வடக்கு மாவட்ட பாமக மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் ஜி.வி.சுப்பிரமணி, பாமக மாவட்ட தலைவர் கணினி செல்வம், கொளத்தூர் பகுதி செயலாளர் சுரேஷ், சமூக சேவகர் ஐசப்நாகராஜ் ஆகியோர் கலந்துகொண்டு வன்னியர் சங்கத்தின் கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினர்.பின்னர் மறைந்த வன்னியர் சங்க தலைவர் ஜெ.குருவின் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர்கள் தூவி இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர். இதனைத்தொடர்ந்து பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர். இதில், சங்க பொறுப் பாளர்கள் வேலு, வெங்கடேசன், கோவிந்தராஜ்வேலு, செந்தில், அப்பு, மணி, அருள், தேவராஜ், விஜய், அன்பு, கார்த்திக் உள்ளிட்ட வன்னியர் சங்கம் மற்றும் பாமக நிர்வாகி,பொறுப் பாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.முடிவில் 65 வது வட்ட தலைவர் விஜய், செயலாளர் விஜயரங்கன் ஆகியோர் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## பெரம்பலூர் அருகே குன்னம் பகுதியில் திமுக விசிகவினர் இடையே பயங்கர மோதல்



பெரம்பலூர், மே.27-

குன்னம் தொகுதி எம்எல்ஏ எஸ்.எஸ். சிவசங்கரின் நன்றி தெரிவிக்கும் நிகழ்வுக்குச் சென்ற திமுகவினரை, குன்னம் பேருந்து நிலையம் அருகே விசிகவினர் வழிமறித்துத் தாக்கியதால் மோதல் ஏற்பட்டது. ஒருவரை ஒருவர், கல் மற்றும் கட்டையால் தாக்கிக் கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் சட்டபேரவை தொகுதி எம்எல்ஏவாக பொறுப்பு வகித்து வருபவர் எஸ்.எஸ். சிவசங்கர். முன்னாள் அமைச்சரான சிவசங்கர் கடந்த சில நாட்களாக குன்னம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மக்களை சந்தித்து நன்றி தெரி வித்து வருகிறார். அதன்படி இன்று 6வது கட்டமாக மேலமாத்தூர் உள்பட பல்வேறு இடங்களில் பொதுமக்களை சந்தித்து நன்றி கூறினார்.

இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்காக பெரம்பலூரை சேர்ந்த திமுகவினர் குன்னத்துக்கு காரில் சென்று கொண்டிருந்தனர். அப்போது குன்னம் பேருந்து நிலையம் அருகே காத்திருந்த குன்னம் தொகுதி விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட பொறுப்பாளர் வரதராஜன் தலைமையிலானவர்கள், திமுகவினர் வந்த காரை வழிமறித்து தகராறில் ஈடுபட்டனர். இதனால் இரு தரப்பினர் இடையே மோதல் ஏற்பட்டது.

ஒருவரை ஒருவர், கல் மற்றும் கட்டையால் தாக்கி கொண்டனர். சுமார் 30 நிமிடம் இந்த மோதல் நீடித்தது. இந்த மோதலால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

இது குறித்து தகவல் அறிந்து வந்த குன்னம் போலீஸார் இரு தரப்பினர் இடையே சமாதான பேச்சுவார்த்தை நடத்தினர். இதையடுத்து அவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். இதற்கிடையில் மோதல் குறித்து தகவல் அறிந்ததும் மாவட்ட எஸ்பி லலித்குமார் சம்பவ இடத்துக்கு சென்று ஆய்வு செய்தார்.

விசாரணையில் முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா, விசிகவை விமர்சனம் செய்தது தொடர்பாக, குன்னம் தொகுதி விசிகவினர், கோபம் அடைந்து, திமுகவினர் மீது தாக்குதல் நடத்தியது தெரியவந்தது.

இந்தத் தாக்குதலில் திமுகவினர்தான் அதிகளவு பாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இது குறித்து போலீஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஓரப்பம் திரவுபதி அம்மன் கோவிலில் துரியோதனன் படுகளம் நிகழ்ச்சி : 40 அடி களிமண் உருவம் அமைத்து மகாபாரத பெருவிழா கோலாகல நிறைவு

கிருஷ்ணகிரி, மே.27-

கிருஷ்ணகிரி அடுத்த ஒரப்பம் கிராமத்தில் அமைந்துள்ள திரவுபதி அம்மன் தர்மராஜா திருக்கோவில் கோவிலின் 800ஆம் ஆண்டு மகாபாரத பெருவிழா கடந்த 8ம் தேதி தொடங்கி சிறப்பாக நடைபெற்று வந்தது.

விழாவையொட்டி பையனப்பள்ளி ஸ்ரீ லட்சுமி நாராயணசுவாமி நாடக கலைக்குழுவினர் சார்பில் பாஞ்சாலி திருக்கல்யாணம், அர்ச்சுனன் தபசு, அரவாண் கடபலி, அரக்கு மாளிகை உள்ளிட்ட பல்வேறு இதிகாச நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன.



இதன் நிறைவு நாளான நேற்று துரியோதனன் படுகளம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்காக கோவில் அருகே 40 அடி நீளத்தில் களிமண்ணால் துரியோதனன் உருவம் வடிவமைக்கப்பட்டு, துரியோதனன் வதம் செய்யும் நாடகம் நடத்தப்பட்டது. இதில் துரியோதனன் மற்றும் பீமன் வேடமணிந்த கலைஞர்கள் மோதும் காட்சிகள் நடைபெற்றன. பின்னர் பீமன், துரியோதனனை கதாயுதத்தால் தொடையில் அடித்து வதம் செய்யும் நிகழ்ச்சி நடந்தது.

இதனைத் தொடர்ந்து திரவுபதி சபதத்தை நிறைவேற்றும் வகையில் பக்தர்கள் திரவுபதி சிலையை துரியோதனன் உருவத்தின் மீது வைத்து, திரவுபதி கூந்தல் முடிக்கும் சடங்கையும் நடத்தினர். மேலும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என ஏராளமான பக்தர்கள் திருநங்கையிடம் முறம் மற்றும் துடைப்பத்தால் தலையில் அடிவாங்கி தங்களின் வேண்டுதலை நிறைவேற்றினர்.

இந்த நிகழ்வுகளை சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து திரண்டிருந்த பொதுமக்கள் ஆர்வமுடன் கண்டு களித்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை ஒரப்பம், சின்ன ஒரப்பம், நாகனப்பள்ளி, சுண்டம் பட்டி, சின்ன சுண்டம்பட்டி ஆகிய 5 ஊர்களை சேர்ந்த கவுண்டர்கள், தர்மகத்தாக்கள், பூசாரிகள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் செய்திருந்தனர்.



# இராஜகம்பீரம் உதவி மின்நிலையத்தில் அடிக்கடி மின்தடை: அதிகாரியிடம் தமிழக வெற்றிக் கழகம் மனு

மானாமதுரை மே.27-

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டத்திற்குட்பட்ட இராஜகம்பீரம் உதவி மின்நிலையத்தின் கீழ் செயல்படும் பல்வேறு கிராமங்களில் அடிக்கடி மின்தடை ஏற்பட்டு பொதுமக்கள் கடும் அவதியடைந்து வருவதாக கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து, தமிழக வெற்றிக் கழகம் சார்பில் சிவகங்கை தெற்கு மாவட்டச் செயலாளர் முத்துபாரதி மற்றும் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் இளங்கோவன் தலைமையில், மானாமதுரை மேற்கு ஒன்றியச் செயலாளர் சரண்ராஜ் மற்றும் இணைச் செயலாளர் முருகானந்தம் முன்னிலையில் கழக நிர்வாகிகள் இராஜகம்பீரம் உதவி மின்நிலைய அதிகாரியை நேரில் சந்தித்து மனு அளித்தனர்.

அந்த மனுவில், அடிக்கடி ஏற்படும் மின்தடையை உடனடியாக சரிசெய்து, பொதுமக்களுக்கு தடையற்ற மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. மேலும், மின்விநியோக குறைபாடுகளை விரைந்து சரிசெய்ய அதிகாரிகள் உறுதியளித்ததாக தெரிவிக்கப்பட்டது.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் தொகை கணக்கெடுப்பு2027 தொடர்பாக மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர்கள், பொறுப்பு அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கான மூன்று நாள் பயிற்சி வகுப்பினை துவக்கி வைத்தார்கள். உடன் மாநகராட்சி ஆணையாளர் .எம்.பி.அமித் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், சென்னை மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரக இணை இயக்குநர் சுபா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) து.சு.துரைமுருகன், வருவாய் கோட்டாட்சியர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.



■ கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் செ.கமலி திருப்பூர் மாவட்டம், அவிநாசி நெடுஞ்சாலைத்துறை ஆய்வு மாளிகையில் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தார்கள்



# காவல் விசாரணையில் உயிரிழந்த இளைஞர் ஆகாஷ் டெலிசன் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறிய தவெக எம்எல்ஏ இளங்கோவன்

மானாமதுரை, மே.27-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கிருஷ்ணராஜபுரம் காலனியைச் சேர்ந்த இளைஞர் ஆகாஷ் டெலிசன் காவல் துறையினர் விசாரணையின் போது தாக்கப்பட்டு உயிரிழந்ததாக கூறப்படும் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், தமிழக வெற்றிக்கழகத்தை சேர்ந்த மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் இளங்கோவன் அதிகாலை நேரத்தில் ஆகாஷ் டெலிசன் இல்லத்திற்கு நேரில் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். அப்போது குடும்பத்தினரிடமிருந்து கோரிக்கை மனுவையும் பெற்றுக்கொண்டார்.

மேலும், சட்டத்துறை அமைச்சர் சி.டி. நிர்மல் குமார் அவர்களுடன் தொலைபேசி வாயிலாக குடும்பத்தினரை பேச வைத்தார். சம்பவம் தொடர்பாக உரிய மற்றும் புனிதமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, சம்பந்தப்பட்ட காவல்துறையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் உறுதி அளித்ததாக தெரிவிக்கப்பட்டது.



■ சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தலைமையில் நடைபெற்றது. மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித்தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித்தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்களிடமிருந்து 295 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, அறிவுறுத்தினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள் உட்பட அரசின் பல்வேறு துறைகளை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ இராமநாதபுரம் மாவட்டம் பார்த்திபனூர் அரசு மருத்துவமனையின் புறநோயாளர் பிரிவில் தினமும் பார்த்திபனூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான மக்கள் சிகிச்சைக்காக வருகின்றனர். இந்நிலையில் இன்று கர்ப்பிணி பெண்கள், முதியவர்கள், பெண்கள் உள்ளிட்ட பலர் நீண்ட நேரமாக காத்திருந்ததாக கூறப்படுகிறது. மருத்துவர் எப்போது வருவார் என சீட்டு பதிவு அலுவலரிடம் நோயாளிகள் கேட்டபோது அலட்சியமாக பதிலளித்ததுடன், பொதுமக்களை அலைக்கழித்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனால் நோயாளிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். சம்பவம் குறித்து மாவட்ட நிர்வாகமும் மருத்துவத்துறையும் நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.



■ நீலகிரி மாவட்டம் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜு குன்னூர் சட்டமன்ற அலுவலகத்தை திறந்து வைத்தார். குன்னூர் சட்டமன்ற பகுதிகளுக்கு உட்பட்ட பொது மக்கள் தங்களின் குறைகளை மனுக்களாக அளிக்கலாம். பொது மக்கள் அளிக்கப்படும் மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு தீர்வு காணப்படும்.



# கிருஷ்ணகிரியில் நடந்த மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 7 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.51 லட்சம் நலத்திட்ட உதவிகள் கலெக்டர் வழங்கினார்

கிருஷ்ணகிரி, மே.27-

கிருஷ்ணகிரியில் நடந்த குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 7 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1 லட்சத்து 51 ஆயிரம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை கலெக்டர் வழங்கினார்.

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் தினேஷ்குமார் தலைமையில் நேற்று நடந்தது. இதில் பொதுமக்கள் வீட்டுமனை பட்டா, விலையில்லா தையல் எந்திரம், சலவை பெட்டி, முதியோர் உதவி தொகை, சாலை வசதி, மின்சார வசதி உள்பட 556 மனுக்களை கலெக்டரிடம் வழங்கினார்கள். மனுக்களை பெற்றுக் கொண்ட கலெக்டர் அதன் மீது விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 3 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.47 ஆயிரத்து 250 மதிப்புள்ள இருசக்கர நாற்காலி, ஒரு மாற்றுத்திறனாளிக்கு ரூ.9,500 மதிப்பில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலி, 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2,400 மதிப்புள்ள பிரெய்லி கைகடிகாரங்கள் மற்றும் ஒரு மாற்றுத்திறனாளிக்கு ரூ.92,500 மதிப்புள்ள நவீன செயற்கை கால் என மொத்தம் 7 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1 லட்சத்து 51 ஆயிரத்து 650 மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த கூட்டத்தில் முகுந்தன் எம்எல்ஏ., சமூக பாதுகாப்பு திட்ட தனி துணை ஆட்சியர் அபிநயா, மாவட்ட ஆதி திராவிட்டர் நல அலுவலர் சிவக்குமார், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (நிலம்) தர்மராஜ், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் முருகேசன், பயிற்சி துணை கலெக்டர் சவுமியா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# குன்னூர் அருள்மிகு ஸ்ரீமாசாணிஅம்மன் திருக்கோயில் பூகுண்டம் திருவிழா

குன்னூர், மே.27-

நீலகிரி மாவட்டம் குன்னூர் மாடல் ஹவுஸ் பகுதியில் பிரதான தெய்வமாக அருள்மிகு ஸ்ரீ மாசாணி அம்மன் சன்னதி உள்ளது இங்கு உள்ள ஸ்ரீ மாசாணி அம்மன் சன்னதியில் அம்மன் சிலை படுத்த வாக்கில் உள்ளது.

இந்த கோயிலில் உள்ள ஸ்ரீமாசாணி அம்மனுக்கு ஒவ்வொரு மாதம் அமாவாசை அன்று சிறப்பு அலங்காரத்துடன் பூஜைகள் நடைப்பெறும் இந்தபூஜையில் உள்ளூர் மட்டுமின்றி வெளி மாவட்டம் மற்றும் பல்வேறு மாநிலத்தில் இருந்தும், ஏராளமாக பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு அம்மனை தரிசித்து செல்கின்றனர்.

இந்த நிலையில் கடந்த 23ம் தேதி அம்மன் சன்னதியில் கொடி ஏற்றத்துடன் விழா தொடங்கியது. இதனை தொடர்ந்து பூ குண்டம் நிகழ்ச்சி நடைப்பெற்றது இதில் விரதம் இருந்த 100க்கும் மேற்பட்ட பக்தர்கள் பூ குண்டம் ஏராளமான இறங்கி தங்களுடைய வேண்டுதலை நிறைவேற்றி னார்கள். அதனை தொடர்ந்து பக்தர்களுக்கு அண்னதானம் வழங்கப்பட்டது.

இந்த விழாவில் ஏராளமான பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு அருள்மிகு ஸ்ரீமாசாணி அம்மன் தரிசனம் பெற்றனர்



# நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

உதகை, மே.27-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் மாவட்ட குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு, பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 130 மனுக்களை பெற்றுக் கொண்டார்.

ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் லோகநாயகி (பொது), பாலச்சந்திரன் (கணக்குகள்), மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், உதவி ஆணையர் (கலால்) மாதேஷ்வரன் உட்பட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161